1990 ஏப்ரல் 23]

9-45 மணி

திரு. ஆர். நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக சிறிய விவசாயிகள் கூடுதல் எண்ணிக்கையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிறார்கள். 5 கிலோ பாக்கெட்டுகளை இலவசமாக அவர்களுக்கு வழங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. நூர்முகமது அவர்கள் கேட்ட கேள்விக்கு அதற்கான பதிலை அளித்து இருக்கிறேன். இந்த மினி கட்டுகள் சிறிய விவசாயிகள், பெரிய விவசாயிகள், அனைவருக்கும் நாம் வழங்குகிறோம். ஆனால், இந்த கேள்வி கன்னியாகுமரி மாவட்டத்தில் சிறிய விவசாயிகள் தான் பெரும்பாலும் இருக்கிறார்கள். 50 கிலோ கொண்ட பைகளில் போட்டுத் தருவதால் விவசாயிகள் பயன்பெறமுடியவில்லை. ஆகவே தான் 1 கிலோ, 2 கிலோ. 3 கிலோ, 4, 5, 10 கிலோ வரைக்கும் உள்ள பைகளில் போட்டு வழங்கவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டார்கள். அந்த அடிப்படையில்தான் இந்த அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, கன்னியாகுமரி மாவட்டத்தில் வழங்குகின்ற இந்த மினிக்கட்டு 100க்கு 70 சதவீதம் குறையாமல் இந்த சிறிய பைகளில் போட்டு மினி கட்டுகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 2114, மற்றும் 6766 மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன.

அரசு மருத்துவமனை.

* 3538. திரு. ந. நஞ்சப்பன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தர்மபுரி மாவட்டம் பெண்ணாகரத்தில் அரசு மருத்துவமனை அமைக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. ந. நஞ்சப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்ணாகரம் தொகுதியில் அல்லது பெண்ணாகரம் தாலுக்காவில் ஒரு அரசு மருத்துவமனை கூட இதுவரையில் இல்லை. 2½ லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகை உள்ள அந்தத் தொகுதியில், அந்த தாலுக்கா மையத்தில் ஒரு அரசு மருத்துவ மனை இதுவரை அமைக்கப்படாதது அந்த மக்களுக்கு பயன் அளிக்காத நிலையில் இருக்கிறது. ஆகவே, அரசு மறு பரிசீலனை செய்து இந்த ஆண்டு திட்டத்தில் அரசு மருத்துவ மனை ஒன்றை திறக்க நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்ணாகரத்தின் அருகில் தர்மபுரி மாவட்ட அரசினர் தலைமை மருத்துவமனை ஒன்று செயல்பட்டு வருகிறது. அந்தப் பகுதித் தேவைகளை அதுவே நிறைவேற்றி முடிக்கிற வகையில் இருக்கிறது. மேலும் புதியதாக ஆரம்பிக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையங்கள் 30 ஆயிரம் மக்கள் தொகைக்கு ஒன்று என்ற வகையில் அமைக்கப் பட்டு வருகிறது. அதை 20 ஆயிரம் மக்கள் தொகைக்கு ஒன்று என்று அதிகரிக்கின்றபோது மாண்புமிகு உறுப்பினருடைய கருத்துக்களை இந்த அரசு பரிசீலனையில் எடுத்துக் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ந. நஞ்சப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது ஒரு தாலுக்கா மையம் என்பதை நான் இங்கே தெளிவுப்படுத்த விரும்புகிறேன். ஆரம்ப சுகாதார நிலையத்தை நான் கேட்கவில்லை. ஆரம்ப சுகாதார நிலையம் அங்கே இருக்கிறது. அந்த மாவட்டத்திலே அதிகமான நோய் தாக்குதலுக்கு ஆட்பட்டு சொல்லப்போனால் மலேரியா, காச நோய், தொழு நோய், இத்தகைய நோய்கள் எல்லாம் அதிகமாகத் தாக்குகின்ற பகுதி என்று அரசு புள்ளிவிவரங்களை கூறுகின்றன. அங்கு அரசு மருத்துவமனை அமைக்க அரசு நிலம் கேட்கிறது என்று 6. ஏக்கர் நிலத்தை வேறு பொதுமக்கள் சார்பாக வாங்கி வைத்து இருக்கிறோம். ஆகவே மக்கள் நலனை கருத்தில் கொண்டு பரிவுடன் மறு பரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றி முடிவு எடுக்கின்ற பொது மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை அரசு பரிசீலனை செய்யும் என தெரிவித்துக் கொள்கிறேன்.

இராதாபுரம் தொகுதிக்குக் குடிநீர் வழங்கல்.

*3713. திருமதி ரமணி நல்லதம்பி :

மாண்புமிகு மக்கள்நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

இராதாபுரம் தொகுதியில் குடிநீர் பிரச்சினையை நிரந்தரமாக நீக்கும்நோக்கத்துடன் சேரன்மாதேவியில் இருந்து குழாய் மூலம் குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குடிநீர் திட்டத்திற்கு நீராதாரம் தேர்ந்தெடுக்கும் பணிகள் தற்சமயம் துவங்கப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளது.